# இலங்கை மத்திய வங்கி

## வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2020 பெப்புருவரி 14 அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் 2020இன் 01ஆம் இலக்கம்

---

2020 மே 27ஆம் நாளன்று இறுதியாக இற்றைப்படுத்தப்பட்டது

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிச் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான 2018ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்**

1. இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று (குறிப்பிட்ட பணிப்புரையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு தகைமையுடைய வங்கி) வெளிநாட்டு இணைத்தரப்பினருடன் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் பொழுது அடிப்படைக் கொடுக்கல்வாங்கலொன்று (வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் மற்றும் அதன் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளில் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் அல்லது அனுமதிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்) தேவைப்படுத்தப்படுகின்றதா?

   **ஆம், வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் தவிர, தகைமையுடைய வங்கியொன்று, இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள எவரேனும் இணைத்தரப்பினருடன் பெறுதிக் கொடுக்கல்வாங்கலொன்றில் ஈடுபடும் பொழுது செல்லுபடியாகக் கூடிய அடிப்படைக் கொடுக்கல்வாங்கலொன்று அவசியமாகும்.**

2. தகைமையுடைய வங்கிகள் வெளிநாட்டிலுள்ள இணைத்தரப்பினருடன் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் இறுதிப் பயன்படுத்துநர் வணிகம் (குறிப்பிட்ட பணிப்புரையின் 5.1(அ)இல் விபரிக்கப்பட்டவாறு) இதன் சந்தை உருவாக்கமல்லா வணிகத்தில் ஒன்றுக்கொன்று உத்தரவாத அடிப்படைகள் மீதான பாதுகாப்பு பணம் என்பனவற்றை அவற்றின் உள்நாட்டு வாடிக்கையாளர்களுடனும் ஏனைய தகைமையுடைய வங்கிகளுடனும் (குறிப்பிட்ட பணிப்புரையின் பந்தி 5.1(ஆ) இல் விபரிக்கப்பட்டவாறு) மட்டும் மேற்கொள்வதற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதா?

   **இறுதிப் பயன்படுத்துநர் வணிகத்தினையும் சந்தை உருவாக்கமல்லாத வணிகத்தினையும் வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுடன் மேற்கொள்ள முடியம். எனினும், பெறுதிச் சந்தை உருவாக்க வணிகத்தினை வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுடன் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.**

3. கொடுகடன் ஆதரவு இணைப்பின் கீழ் காசு மற்றும் பிணையங்களின் மாற்றல் தொடர்பான நிலைமை என்ன? குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல் இல்லாமல் அத்தகைய மாற்றல்களை வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுடன் மேற்கொள்வதற்கு தகைமையுடைய வங்கிகள் அனுமதிக்கப்படுகின்றனவா?

   **பணிப்புரையானது, இணைத்தரப்பினருடன் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச்சாசன சங்கம் உடன்படிக்கையொன்றில் கையெழுத்திடப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்துகிறது. கொடுகடன் ஆதரவு இணைப்பு என்பது பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச் சாசன சங்கம் உடன்படிக்கையின் ஒரு பகுதியாகும் என்பதுடன் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச்சாசன சங்கம் இல்லாமல் கொடுகடன் ஆதரவு இணைப்பினை நிறைவேற்ற முடியாது. இதன்படி, இரண்டு தரப்பினரும் கொடுகடன் ஆதரவு இணைப்பில் கையொப்பமிட விரும்புமிடத்து அவர்கள் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச்சாசன சங்கத்தில் நுழைதல் வேண்டும். எனினும் இரண்டு தரப்பினரும் இணங்குமிடத்து அவர்கள் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச்சாசன சங்கம் ஒன்றில் கையொப்பமிடுவதிலிருந்து விலகிக் கொள்ளலாம். கொடுகடன் ஆதரவு இணைப்பின் கீழ் காசு மற்றும் பிணையங்களை மாற்றல் செய்வதற்கு குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல் தேவைப்படுத்தப்படவில்லை.**

4. குறிப்பிட்ட பணிப்புரையின் பந்தி 6.3, பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் தகைமையுடைய வங்கி வாடிக்கையாளரொருவருக்குத் தேர்வுக் கட்டணம் தவிர்ந்த முன்கூட்டிய கொடுப்பனவுகளைச் செய்வதனைத் தடைசெய்கிறது. தகைமையுடைய வங்கியொன்றினால் செய்யப்படும் முன்கூட்டிய கொடுப்பனவுகளுக்கு பிரயோகிக்கப்படுகின்ற இத்தடைகள் வெளிநாட்டு இணைத்தரப்பினருடன் மேற்கொள்ளப்படுகின்ற தெரிவு கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஏற்புடைத்தாகுமா?

**பணிப்புரை 6.3 வெளிநாட்டு இணைத்தரப்பினருடனான பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் சமமான முறையில் ஏற்புடைத்தாகும்.**

5. வங்கியொன்று வரலாற்று வீதத்தில் (ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆரம்ப வீதம்) வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தத்தினை நீடிக்க, அல்லது முடிவுறுத்த அல்லது மீளப்பதிய முடியுமா?

**நிதியியல் பெறுமதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான 2018ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் பணிப்புரை 5.7இன் நியதிகளில் பெறுதிச் சாதன ஒப்பந்தத்தினைப் பின்வரும் விதத்தில் முடிவுறுத்தலாம் அல்லது மீளப்பதியலாம்.**

- **தரப்பினர்கள் பெறுதிச் சாதனங்கள் இனிமேல் தேவையில்லை என் கருதுவார்களேயாயின் அவர்கள் பெறுதிச் சாதனங்களைப் பகுதியளவில் அல்லது முழுமையாக முடிவுறுத்தலாம் அல்லது மீண்டும் விற்றுவிடலாம்.**
- **ஒரு முறை முடிவுறுத்தப்பட்ட அனைத்துப் பெறுதிச் சாதன ஒப்பந்தங்களும் இப்பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியமங்களுக்குட்பட்டு மீளப்பதியப்படுவதற்கு தகைமையுடையனவாகும்.**
- **முதிர்ச்சிக்கு முன்னதாக பெறுதிச்சாதன ஒப்பந்தமொன்று முடிவுறுத்தப்படுகின்ற வேளையில், அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள் இன்னமும் செல்லுபடியாகக் கூடியதாக இருக்குமிடத்து அத்தகைய வாடிக்கையாளரிடமிருந்து சந்தைப்படியான மீள்மதிப்பீட்டு நட்டங்கள் அறவிடப்படுதல் வேண்டும்.**
- **சந்தைப்படியான மீள்மதிப்பீட்டு இலாபத்தினை (நிதியியல் வெகுமதி) வாடிக்கையாளருக்குச் செலுத்தக்கூடாது.**
- **எனினும், செலாவணி நன்மைகள் ஏதுமிருப்பின் அதனை மீளப்பதியும் வேளையில் வாடிக்கையாளருக்கு வழங்கலாம்.**

**வெளிநாட்டுச் செலாவணி வியாபாரங்கள் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான 2009ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் பணிப்புரை 4.1(xii) பணிப்புரையின் நியதிகளில், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் நடைமுறைச் சந்தை வீதங்களில் நடைபெற வேண்டுமென்பதுடன், சந்தைக்கு வெளியேயான அல்லது வரலாற்று வீதத்தில் மீண்டும் மீண்டும் கொடுக்கல்வாங்கல்கள் செய்வது அனுமதிக்கப்படவில்லை.**

**எனினும், கொவிட்-19 நிலவுகின்ற வியாபாரச் சூழ்நிலையொன்றின் கீழ் வாடிக்கையாளர்கள், முதிர்ச்சியில் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தங்களை வழங்குவதற்கு அவர்கள் இயலுமையின்றி இருப்பதன் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி இழப்புக்களை ஈர்த்துக் கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லாமலிருக்கலாம். ஆகவே, உரிமம்பெற்ற வங்கிகள் 2020.03.19இல் உள்ளவாறு வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தங்களை, எப்பொழுது முதிர்ச்சியடைகின்றதோ அப்பொழுது நீடிக்கப்பட்ட திகதிக்கு ஏற்புடைத்தான முன்னோக்கிய கட்டணத்தினைச் சீராக்கியதன் பின்னரான ஒப்பந்தக் கட்டணத்தில் நீடித்துக் கொள்ளலாம். எனினும், உலகளாகவிய தற்போதைய தொற்றின் காரணமாகத்தான் உண்மையில் வாடிக்கையாளர்களினால் முன்னோக்கிய ஒப்பந்தத்தினை உரிய திகதியில் வழங்க முடியாமல் போனதா என்பதனைச் சரிபார்ப்பதற்கு வங்கிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.**